உ

ஓம்

தத்சத் பரப்பிர்மணே நம:

ஆத்ம ஞான ஆலய தத்துவார்த்த விளக்கம்

இஃது


ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுரு சுவாமிகள் அருளியது

இவ்வாலயம் இராமநாதபுரம் மாவட்டம்
மானமதுரை கோட்டம் தஞ்சாக்கூர் என்னும்
திவ்ய தலத்தில் அமைந்துள்ளது.

சிவா அமிர்த மௌன ஞான சபை
அன்பர்களால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது

1972

விரோதிகிருது வருடம் தை மாதம்


ஆத்ம ஞான சூரியன்
மவுனம்
மாமவுனம்
நிலையம்
ஓம்
ஆத்ம ஞான
ஆலயம்
பக்தி
யோக
நிலையம்
ஆத்ம ஞான சூரியன்
வாசல்
வாசல்
வராண்டா
வாசல்
கிணறு
படிகள்
வேப்பமரம்
கேட்டு
வேப்பமரம்



ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுரு சுவாமிகள்

ஆத்ம ஞான அறிகுறியே வேல்

ஓம்

ஆத்மஞான ஆலயத்தின் தத்துவார்த்த விளக்கம்

1. ஆத்ம ஞான ஆலயக் கட்டிட அமைப்பு சூரியன் உதயமாகிற கிழக்குத் திசையை நோக்கி 36க்கு, 36 அடியில் அதாவது 36 தத்துவ முறையிலும் ஆத்மஞான சூரியன் உதயமாகிற முறையிலும் அமைந்துள்ளது.

2. முன் முகப்பு வாசலில் ஐந்து ஆர்ச்சு வளைவுகளும் பக்கத்தில் வடபுரமும், தென்புரமும் இரண்டு சிறிய வளைவுகளும் உடையதாகவும் அதன்மேலே முன்புரம் அழகிய சிறிய கோபுரமும் இரண்டு புரமும் இரண்டு சிறிய வளைவுகளும் இரண்டு முக்கோண வளைவுகளும் இரண்டு கோடியிலும் இரண்டு ஆத்மஞான சூரியன்கள் உருவம் உடையதாகவும் அதாவது ஆலயம் ஆச்சிரமம் என்கிற தத்துவ முறையிலும் பஞ்சபூததத்துவ முறையிலும் அமைந்துள்ளது.

3. அதை அடுத்து பெரிய ஹால் போன்ற திருணேயும் அதில் மூன்று வாசலும் அதாவது மூன்று கண்களைப் போன்ற தத்துவ முறையில் அமைந்துள்ளது. தரையிலிருந்து அங்கே ஏறிச்செல்ல மூன்று வாசலுக்கும் நேராக மூன்று படிகளுடன் மூன்று படிகள் தனித் தனியாக அதாவது மூவாசை, மும்மலம், முக்குணம் முதலாக எல்லாக் காமாதிகளையும் நீக்கி ஏறிச்செல்ல வேண்டுமென்கிற தத்துவ முறையில் அமைந்துள்ளது.

4. வடபுரமுள்ள வாசல் வழியாக ஏறி உள்ளே சென்ருல் இரண்டு தூய அறைகள் அதாவது பக்தி நிலே. யோகநிலேகளின் சாதனேகளுக் குரியதத்துவ முறையில் அமைந்துள்ளது.

5. தென்புரமுள்ள வாசல் வழியாக ஏறி உள்ளே சென்ருல் இரண்டு தூய்மையான அறைகள் அதாவது மௌன நிலே, மாமவுன நிலே களின் சாதனேகளுக்குரிய தத்துவ முறையில் அமைந்துள்ளது.

6. நடுவிலுள்ள பெரிய வாசல் வழியாக ஏறி உள்ளே சென்ருல் மிக்கத் தூய்மையானதும் என்றும் வெளிச்சமும் காற்றும் உள்ளதுமான

பெரிய அழகிய ஹால் உள்ளது. அதாவது ஆத்மஞான உலக மாபெரும் சபை என்னும் (பரிசுத்த இருதயமாகிய) தத்து வார்த்த முறையில் அமைந்துள்ளது.

அதாவது உலகத்தோற்றம் நிற்றல், மறைவு முதல் எல்லாம் மனமாகிய இருதயத்தில் அடங்கி இருக்கிறது என்ற தத்துவ முறையில் அமைந்துள்ளது அதில் வடபுரம் தெற்கு முகமாக பரம குருவாகிய தெட்சணாமூர்த்தி திருவுருவப் படமும் ஆத்மஞான நூல்நிலைய அலமாரிகளும் அதாவது பரமகுரு உபதேசமும் ஆத்மஞான நூல்களை கற்க வேண்டுமென்கிற தத்துவ முறையில் அமைந்துள்ளது. மேல் புரம் மேலே நடராஜர் திருவுருவப் படமும் தென்புரம் வடக்கு முகமாக ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌன குரு சுவாமிகளின் திருவுருவப் படமும் அதாவது ஆத்ம ஞானத்தை அடைந்த அறிகுறியாக வேலை கைக்கொண்டதாக அமைந்துள்ளது. பக்கத்தில் மாமவுனநிலை அறையிலிருந்து இங்கே ஹாலுக்கு வர ஒரு சிறிய வழியும் அமைந்துள்ளது. அதாவது மாமவுன நிலையை அடைந்தவர்கள் பிர்ம ஆன்ம ஐக்கிய முத்தியை

அடைவார்கள் என்பதாகும். அதற்கு மேல்புரம் தென்புரத்தில் இரண்டும் வடபுரத்தில் இரண்டும் நீலக் கலரிலும் தூய வெள்ளைக் கலரிலும் முக்கோண வடிவமும் சிறிய துவாரங்களும் உடையதான நான்கு மேடைகள் அமைந்துள்ளது. அதாவது அசுத்த மனம், சுத்த மனம் அசுத்த அறிவு, சுத்த அறிவு என்ற தத்துவமுறையில் அமைந்துள்ளது.

7. அதை அடுத்து மூன்று மாடிகளை உடைய அறைகள் (மூலஸ்தானம்) அதாவது தூலம், சூக்குமம், காரணம் என்ற மூன்று சரீர தத்துவ முறையில் தூல சரீரம் நவகோணமாகவும் முன்புரம் முக்கோண வடிவில் பெரிய வாசலுடன் சுற்றி வாய், கண், காது, மூக்கு முதலிய நவத்துவாரங்களாகிய அழகிய சிறிய சன்னல்கள் உடையதாகவும் மேலே அறுகோணத்தில் சிரசைப் போன்று அழகிய விமானமும் அதன்மேல் ஸ்தூவியாகிய கலசமும் அமைந்துள்ளது முக்கோண வாசலில் வெள்ளை சிகப்பு, நீலக்கலரில் திரையும் அதில் மூவாசை, மும்மலம், முக்குணம் என்று எழுதி இருக்கிறது.

8. அதன் உட்புரம் சுற்றுப்பிரகாரமும் அடுத்து சூக்கும சரீரமான தூய அறையும் சதுர வடிவில் அமைந்துள்ளது.

9. அதன் உட்புரம் காரண சரீரமான அறை மிக மிகத் தூய்மை மிக்க தாகவும் அதனுள் படிகமயமான சிறிய அழகிய மேடையும் அதன்மேல் வட்டவடிவில் பெரிய சுத்த வெள்ளை நிறக்கண்ணுடியும் அதன் மத்தியில் முக்கோண வடிவில் படிக்க நிறக்குறி வடிவமும் அதன் பின்னுல் அழகிய திருவிளக்கும் அமைந்துள்ளது. அதாவது கண்ணுடி சுத்தல் பரப்பிரம சொரூபமாகவும் முக்கோணம் பரப்பிரமத்தில் தோன்றுகிற சுத்த ஆன்ம சொரூபமாகவும் திருவிளக்கு பரஞ்ஜோதி சொரூபமாகவும் என்ற தத்துவ முறையில் அமைந்துள்ளது அதை மறைத்து வாசலில் தூய வெள்ளைத்திரை போடப் பட்டிருக்கிறது. அதன் மத்தியில் பிரணவ அச்சரம் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது ஓங்காரமாகிய அகார-உகார-மகாரம் என்னும் அச்சரம் தோற்றம், நிற்றல், லயம் என்னும் மூன்றையும் கடந்து பிரம ஆன்ம ஐக்ய அத்துவிதமடையும் அறிக்குறியாகும்.

10. அதற்குக் கீழே நான்கு படிகளுடன் ஒரு சுரங்க அறை இருள் நிறைந்ததாக அமைந்துள்ளது. அதாவது மூலப் பிரகிருதிமாயையும் அசுத்த ஆன்மாவும், ஆத்மஞான நான்கு சாதனைகளுமான தத்துவ முறையில் அமைந்துள்ளது.

11. இந்த இரண்டு அடுக்கு அறைகளுக்கு மேலே ஒரு சிறிய துவாரமுடன் ஒரு அறை மிக்க தூய்மையாக அமைந்துள்ளது. அதனுள் துவார வழியாகத் திறந்து பார்த்தால் அங்கே எதுவுமில்லாமல் ஏக சுத்த வெட்ட வெளியாகக் காட்சி அளிக்கிறது. அதாவது முடிவில் எல்லாம் சுத்தம் சர்வம் பிர்மமயம் ஏகம், (சர்வம் பிர்மமயம்), இதுவே (பிர்ம ரகசியம் என்ற தத்துவ முறையில் அமைந்துள்ளது.

12. பொதுவாக சரீரம், ஆன்மா, மாயை. பிர்மம், ஜோதி, ஆத்மஞானம், முத்தி முதலிய தத்துவங்களைக் கொண்ட முறையில் அமைந்துள்ளது.

புறநிலைத் தத்துவார்த்த கருத்துரை விளக்கம்

அகண்ட பரிபூரண சத்து சித்து ஆனந்த சோதி சொரூபமாய் பரபிர்மமாய் சர்வ காரணமாய் விளங்காநின்ற கடவுளுடைய சொரூபத்திலிருந்து தோன்றிப் பிரிந்துள்ள ஆன்மாக்கள் தன்னை மறந்து இவ்வுலகத்தினிடத்தே மாயை என்னும் அஞ்ஞானத்தினால் மூவாசை முதலிய உலகபோக இச்சையுற்று இருவினைப் பயனால் செனன மரணமென்னும் பவசாகரமுற்று பலகால் துன்புற்று அலைந்த ஆன்மாக்கள் பல செனமங்களில் செய்துள்ள நல்வினைப்பயனால் கடவுள் ஞாபகமும் அதை அடைய வேண்டுமென்கிற விருப்பமும் ஏற்பட்டு நித்தியம், அநித்தியம், உண்மை, பொய் முதலியவைகளும் விளங்கப்பெற்று அதற்குரிய அருள்ஞான நூல்களைக் கற்றும் கேட்டும் ஆராய்ந்தும் சற்குருவைத்தேடி அடைந்தும் அவர் கூறியவழியில் வழுவாது திடமாக நின்றும் முதன்மையாக அன்பு பக்தி நிலையில் நின்று அதற்குரிய அன்பு பக்தி ஒழுக்கம் சீவகாருண்யம் தருமம் அடக்கம் சத்தியம் சாந்தம் முதலியவைகளைக் கைகொண்டும் தீய

வைகளை எல்லாம் நீத்தும் சகுணமூர்த்தி வழிபாடும் பூசை செபம் தவம் முதலியதும் வழுவாது செய்து அந்நிலை முடிந்து பின்பு யோகநிலையைக் கைக்கொண்டு வழுவாது நின்று மனஒருமையும் மனோலயமுற்று அந்நிலையும் முடிந்து பின்பு மௌன ஞான சாதனை நிலையை கைக்கொண்டு வாக்கு, மவுனமும் ஏகாந்தமும் சதா ஈசுவர தியானமும் கைக்கொண்டு வழுவாது நின்று அந்நிலையும் முடிந்து பின்பு மாமவுன சாதனை நிலையைக் கைக்கொண்டு மனம். வாக்கு, காயம் முதலாக எல்லாம் ஒடுங்கி. பரம உபசாந்த நிலையைப்பெற்று பரமகுரு அனுக்கிரகத்தால் ஆத்மஞான நிலையை அடைந்து மனம், அறிவு, ஆன்மா முதலியது தூய்மையுற்று மூவாசை, மும்மலம், முக்குணம் முதலாக சர்வமும் நீங்கித் தன் சுய சொரூபத்தையும் பரப்பிர்மமாகிய பரஞ்சோதி சொரூபத்தையும் கண்டு தெரிசித்துப் பேரின்ப சாகரத்தில் மூழ்கி சீவத்தன்மை முதல் எல்லாம் அற்று நிர்க்குணத் தன்மையும் தெய்வீகபரமார்த்திகத் தன்மையு முற்று தாமே அதுவாய் தம்மயமாய் இரண்டற்றதாய் அத்துவிதமாய் சச்சிதானந்த சொரூபமாய் ஏகமாய் முன்போல் பரப்பிர்மமாய் விளங்குவதாகிய முத்திப்பேற்றை அடைந்து உய்வதாகும்.

அகநிலைத் தத்துவார்த்த கருத்துரை விளக்கம்

1. ஆத்மஞான ஆலயத்தின் மூலஸ்தானம் மூன்று அடுக்குகளாக மூன்று அறைகள் அமைந்துள்ளன. அதில் கீழேயுள்ள சுரங்க அறை நான்கு படிகளுடன் அமைந்து இருள் சூழ்ந்ததாக இருக்கிறது.

அங்கே மூலப் பிரகிருதி மாயை என்னும் இருளில் மோகமென்னும் நித்திரையில் உலக போகமென்னும் கனவில் மூழ்கி பலகால் துன்புற்று இருக்கக்கூடிய அசுத்த ஆன்மாக்கள் பல சென்மங்களிற் செய்துள்ள நல்வினைப் பயனால் விழித்து எழுந்து நித்திய அநித்தியமும் உண்மை பொய் முதலியதும் கடவுள் ஞாபகமும் அதை அடையவேண்டுமென்கிற விருப்பமும் ஏற்பட்டு அதற்குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நிலைகளில் பரம சற்குரு அனுக்கிரகத்தால் வழுவாது நின்று நான்கு படிகளையும் கடந்து ஏறி ஆத்மஞான நிலையாகிய உலக மாபெரும்

சபை என்னும் ஹாலுக்கு வந்து அசுத்த மனமும் அசுத்த அறிவும், அசுத்த ஆன்மாவும் தூய்மையுற்று இரண்டாவது மாடியும் காரண சரீரமுமான அறையுள் அமைந்துள்ள சுத்த பிர்ம ஆன்மசோதி, சொரூபத்தை மறைத்துள்ள மூவர்ணத் திரையாகிய மூவாசை, மும்மலம், முக்குணம் முதலியதை நீக்கி அதை அடுத்து மறைத் துள்ள தூய வெண்மையான பிரணவமாகிய ஓங்காரத் திரையும் நீக்கி அங்கே தம் சொரூபமும் பரப்பிர்ம சொரூபமும் பரஞ்சோதி சொரூபமுமான சுத்தப் பரப்பிர்ம ஆன்மசோதி சொரூப தெரி சனத்தைக் கண்டு தெரிசித்து பேரின்ப சுக போகத்தைப் பெற்று பின்பு அச்சொரூபமாய் சுத்த தத்துவ ஆன்மாவாய் தாமே அதுவாய் நின்று அதன் பிறகு மூன்ருவது மாடியாகிய மேலேயுள்ள அறையுள் சுத்தமாய் ஏகமாய் வெட்டவெளியாய் அரூபமாய் பரம்பிர்மமாய் விளங்கக்கூடிய சொரூபத்தில் இரண்டறக் கலந்து தாமே அதுவாய் தம்மயமாய் அத்துவிதமாய் சத்து சித்து ஆனந்த சொரூபமாய் முன்போல் ஏகமாய் பரிபூரணமாய் விளங்குவதாகும். இதுவே முடிவில் சர்வம் பிர்மம், பிர்ம ரகசியமாகும்.

கருத்துரைச் சுருக்கம்

2. அதாவது பரப்பிர்மத்திலிருந்து தோன்றிப் பிரிந்து பலகால் துன்புற்று அலைந்த ஆன்மாக்கள் மீண்டும் அதை அடைந்து முன்போல் ஏகமாய் தாமே அதுவாய் பரப்பிரம்மமாய் பூரணமாய் விளங்கப் பெறுவதாகும். இதுவே கெதி என்றும், வீடு என்றும், மோட்சமென்றும், முத்தி என்றும் சீவப் பிர்ம ஐக்கியம் என்றும் சொல்லப் படுவதாகும்.

உ

ஓம்

சாந்தி சாந்தி சாந்தி

அங்கே மேலே உள்ள

நடராஜர் திருவுருவப் படத்தின் கருத்துரை

அதாவது கண்ணடி சுத்த பரப்பிரம்மமாகவும் அதனுள் இருளாகத் தோன்றுவது மாயையாகவும் அதன் மத்கியில் சுத்த வெட்டவெளியா

கவும் பிரகாசமாகவும் தோன்றுவது சிற்பர வெளியாகவும் ஒளியாகவும் சோதியாகவும் அதன் மத்தியில் நடராஜர் உருவம் ஒரு காலை முயலகன் என்னும் அசுரனுடைய உருவத்தின்மீது மிதித்தவண்ணமும் ஒரு காலை தூக்கியவண்ணமும் ஆனந்தமாக தாண்டவம் செய்கிறபடி தோன்றுகிறது. ஒருகரம் அபயஸ்தம் செய்வதும் ஒரு கரத்தில் உடுக்கையும், ஒரு கரத்தில் அக்கினியும் ஒரு கரம் தூக்கிய காலைக் காட்டுவதுமாக தோன்றுகிறது. உடுக்கை உலகத்தோற்றமும் அபயஸ்தம் நிலைநிற்கச் செய்வதும் அக்கினி அழிப்பதும் முயலகனாகிய மனமே எல்லாவற்றிற்கும் காரணம் என்பதான அறிகுறியாகவும் மற்றும் உடுக்கை ஞான குரு உபதேசமாகவும் அபயஸ்தம் அனுக்கிரகம் செய்வதும் அக்கினி மாயை மூவாசை இருவினை முதலிய எல்லாம் நீக்கக்கூடிய ஞானமாகவும் ஒரு கரம் ஆன்மாக்கள் முடிவில் சேரவேண்டிய இடத்தைக்காட்டும் அறிகுறியாகவும் தோன்றுகிறது. மேலும் உலகிலுள்ள சர்வ ஆன்ம கோடிகளையும் தான் சதா இயக்குவிக்கிற அறிகுறியாகவும் விளங்குவதாகும். (முயலகன் என்பது முயல்—முயற்சிப்பது, அகன் என்பது—மனம்) அகமாகிய மனமானது எதையாவது நினைத்து முயற்சிப்பதாகும்.

மனதை ஒழித்தால் எல்லாம் ஒழிந்துவிடும். ஆனந்தநிலை அடையலாம் என்கிற அறிகுறியாகும்.

அதாவது தனது சுயசொரூபமாகிய பரப்பிரம்ம சொரூபத்தில் தோன்றிப் பிரிந்துள்ள ஆன்மகோடிகள் உடலை உற்று இவ்வுலகில் இரு வினைக்கீடாக பலகோடி செனனமுற்று துன்புற்றலைந்த ஆன்மாக்கள் இரு வினைமுதல் எல்லாம் நீத்து மீண்டும் தன் சுய சொரூபத்தை அடைய வருகிறார்கள் என்று அறிந்து ஆனந்த தாண்டவம் செய்யும் அறிகுறியாக விளங்குவதாகும். அதாவது பலநாள் பிரிந்து துன்புற்றலைந்த குழந்தைகள் மீண்டும் வருவதைக்கண்ட தாயைப் போலவும் சில நாள் பிரிந்த இளங்கன்று வருவதைக்கண்ட பசுவைப்போன்ற தன்மையுமாகும், மேலும் பசுக்களாகிய ஆன்மாக்கள் மீண்டும் பதியாகிய இறைவனை அடையும் தத்துவமாகும்.

உலகெலாம் இன்ப உருவமாய் வாழ்க

உ

ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுரு சுவாமி அவர்கள் அருளிய நூல்கள்

சிவா அமிர்தம் ஆத்ம ஞானம் 430 பக்கம் ராப்பர் பையிண்ட் ரூ.	4	00
(காலிகோ பைண்டு)	5	00
ஸ்ரீ சுவாமி அவர்கள் திவ்ய சரிதம் 326 பக்கம் உள்ளது	2	50
ஆதிப்பூர்வயான உண்மைப்பிரகாசம்	1	50
பக்தி ஞானம் முதல் பல உண்மைகளின் விளக்க வேடிக்கை இன்ப சாகரம் விலை	1	00
ஆத்ம ஞான பாசியம் விலை	1	00
திருஞானப்பாவை ஆங்கில கருத்துரையுடன் விலை	0	50
சிவபெருமான் திருத்துயில் எழுச்சி விலை	0	25

(கிடைக்குமிடம்)

மௌனாச்சிரமம் தஞ்சாக்கூர் *P. O.*

திருப்பாசேத்தி (வழி) ராமநாட் மாவட்டம்